# EASTERN UNIVERSITY, SRI LANKA
# FACULTY OF COMMERCE AND MANAGEMENT
# PART II EXAMINATION IN COMMERCE/BUSINESS ADMINISTRATION
# 1998/99 (OCT/NOV 2000)

20 AUG
Eastern University, Sri

COM 305 மூலதனச் சந்தையும் நிதி நிறுவனங்களும்
நேரம் - 3 மணித்தியாலங்கள்
ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

01. a. கடன் ஆக்கத்தில் மத்திய வங்கியின் (Central Bank) பங்கினை பற்றி கலந்துரையாடுக?

(10 புள்ளிகள்)

b. மூலதனச் சந்தையின் அபிவிருத்தி தொடர்பாக மத்திய வங்கியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய தொழில்நுட்பங்கள் பற்றி (New Technologies) சுருக்கமாக விபரிக்குக?

(05 புள்ளிகள்)

c. மத்திய வங்கியின் நாணயப்பிரிவினால் (Currency department) வழங்கப்படும் சேவைகள் யாவை?

(05 புள்ளிகள்)

02. a. இலங்கையில் காணப்படும் ஐந்து (05) வெளிநாட்டு வணிக வங்கிகளின் (Commercial Banks) பெயர்களைக் குறிப்பிடுக?

(05 புள்ளிகள்)

b. இலங்கையின் வணிக வங்கிகளால் ஆற்றப்படும் சேவைகளை சுருக்கமாக விளக்குக?

(15 புள்ளிகள்)

03. a. கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் (Colombo Stock Exchange) அனைத்துப் பங்குகளிற்குமான விலைசுட்டியின் (All share index) பயன்பாடு யாது? அதனை நீர் எவ்வாறு கணிப்பிடுவீர்?

(04 புள்ளிகள்)

b. கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் பங்குத்தரகர்களின் (Stock Brokers) பங்கு பணிகள் (Roles) யாவை?

(04 புள்ளிகள்)

c. கொழும்பு பங்குப்பரிவர்த்தனையிலுள்ள பங்குத்தரகர்களிற்கு நான்கு (04) உதாரணங்கள் தருக?

(04 புள்ளிகள்)

d. ஒரு பங்குச்சந்தையில் (Stock Market) உமது பணத்தை முதலீடு செய்வதனால் நீர் பெறக்கூடிய நன்மைகள் யாவை?

(08 புள்ளிகள்)

10

04. a. கீழ் வருவனவற்றை வேறுபடுத்துக.

(i) வர்த்தக வங்கியும் (The Merchant Bank), / வணிக வங்கியும் (Commercial Bank)

(ii) ஊழியர் சேமலாப நிதியமும் (Employees Provident Fund), ஊழியர் நம்பிக்கை நிதியமும் (Employees Trust Fund)

(iii) முதலீட்டுச் சபையும் (Board of Investment), மூலதனச் சந்தையும் (Capital market)

(iii) குறித்துரைக்கப்பட்ட இடரும் (Specific risk) பட்டியல் முதலீட்டு இடரும் (Portfolio risk)

(16 புள்ளிகள்)

b. காப்புறுதி செய்வோன் (Insurer) காப்புறுத்தப்படுவோன் (Insured) எனும் பதங்களை சுருக்கமாக விபரிக்குக?

(04 புள்ளிகள்)

05. a. 'மூலதனச் சந்தை (Capital Market)' எனும் பதத்தினால் நீர் கருதுவது யாது?

(02 புள்ளிகள்)

b. 'மூலதனச் சந்தையொன்றில் (Capital Market), அலகுப் பொறுப்பாட்சியின் (Unit Trust) பங்கு முக்கிய இடம் வகிக்கின்றது'. இக்கூற்று தொடர்பாக கலந்துரையாடுக.

(18 புள்ளிகள்)

06. a. பிறெயின் கம்பனி லிமிடெட்டானது வருட இறுதியில் 10 ரூபாவைப் பங்கிலாபமாக வழங்கக்கூடிய பங்கு ஒன்றினைக் கொண்டுள்ளது. இப்பங்கினது தற்போதைய விற்பனை விலை 60 ரூபாவாக இருப்பதுடன், ஒரு வருடத்தின் பின்னர் இதன் விலை 66 ரூபாவாக இருக்குமெனவும் கணிப்பிடப்பட்டுள்ளது. இப்பங்கின் வேண்டப்படும் வருவாய் வீதம் 10% ஆகும்.

(i) பங்கின் தற்போதைய பெறுமதி யாது?
(ii) இப் பங்கு கொள்வனவு செய்யப்பட வேண்டுமா?

(08 புள்ளிகள்)

b. உஷா கம்பனி லிமிடெட்டானது கடந்த பத்து வருட காலப்பகுதியில் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. அது ஒரு உயர் வளர்ச்சி வீதத்தைக் கொண்டு காணப்படுகின்றது. இக் கம்பனியானது தனது உழைப்புக்களினதும் பங்கிலாபங்களினதும் (Earnings & Dividends) எதிர்கால வளர்ச்சிவீதம் எவ்வாறு இருக்கும் என மதிப்பீடு செய்து எதிர்வுகூறியுள்ளது. அடுத்த மூன்று வருடங்களுக்கான வளர்ச்சிவீதங்கள் வருமாறு:

1ம் வருடம் - 16%
2ம் வருடம் - 18%
3ம் வருடம் - 20%

3வது வருட இறுதி தொடக்கம் வளர்ச்சி வீதமானது 10% மாக நிலையாக இருக்கும். கம்பனியின் இறுதிப் பங்கிலாபமும் ($D_0$), வேண்டப்படும் வருவாய் வீதமும் ($K_s$) முறையே ரூபா. 2.78 உம் 14% உம் ஆகும்.

...stern University, Sri Lank...

(i) பங்கின் இன்றைய பெறுமானத்தைக் கணிப்பிடுக?
(ii) $P_5$ ஐயும் $P_6$ ஐயும் கணிப்பிடுக?
(iii) 5ம், 6ம், 7ம் 8ம் வருடங்களிற்கான மூலதன இலாப விளைவையும் (Capital gain Yield) பங்கிலாப விளைவையும் (Dividend yield) கணிப்பிடுக?

(12 புள்ளிகள்)

07. a. 'M' என்ற ஆவணத்தின் வருவாய்க்குரிய நியம விலகல் 20 வீதமும் சந்தைக்குரிய நியம விலகல் (பட்டியல் முதலீடு) 15 வீதமும் ஆகும். கீழ் வரும் சந்தர்ப்பங்களில் 'M' இனது பீற்றா (Beta) குணகத்தினைக் கணிப்பிடுக.
(i) $Cor_{YM}$ = 0.70
(ii) $Cor_{YM}$ = + 0.4
(iii) $Cor_{YM}$ = - 2.5

(06 புள்ளிகள்)

b. குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்கான சந்தை நிலைமை கீழே தரப்படுகின்றது.
- சராசரி சந்தை ஆவணத்திற்கான வேண்டப்படும் வருவாய் 20 வீதமாகும். (Km).
- 'P' என்ற ஆவணத்திற்கான பீற்றாக் குணகம் (Beta Coefficient) 4 வீதம் (Bp)2.
- 'P' என்ற ஆவணத்திற்கான இடர் வட்டம் (Risk Premium) 4 வீதம் ($PR_P$).
- 'Q' என்ற ஆவணத்திற்கான இடர் வட்டம் (Risk Premium) 6 வீதம் ($PR_Q$).

நீர் பின்வருவனவற்றைக் கணிப்பிடுமாறு வேண்டப்படுகின்றீர்.
(i) சந்தை இடர் வட்டம் ($RP_M$)?
(ii) நடைமுறைக் காலத்திலுள்ள திறைசேரி ஆவண விளைவு ($KR_F$)?
(iii) 'Q' என்ற ஆவணத்திற்கான பீற்றா குணகம் ($B_Q$)?
(iv) 'P' என்ற ஆவணத்திற்கான வேண்டப்படும் வருவாய் வீதம் ($K_P$)?
(v) 'Q' என்ற ஆவணத்திற்கான வேண்டப்படும் வருவாய் வீதம் ($K_Q$)?

(14 புள்ளிகள்)

08. a. வருடாந்தம் 120 ரூபாவை வட்டியாக வழங்கக்கூடிய, 10 வருட முதிர்வுகாலத்தைக் கொண்ட தொகுதிக்கடன் ஆவணங்களை 'மதர்லாண்ட்' கம்பனி லிமிடெட் தன்னகத்தே கொண்டுள்ளது. தொகுதிக் கடனானது அதன் முதிர்வு காலத்தில் 1000 ரூபா விலையில் மீட்கப்படும்.

வேண்டப்படும் வட்டிவீதம்
(i) 14 வீதம்,
(ii) 16 வீதம்,
(iii) 18 வீதமாகக் காணப்படின், தொகுதிக் கடனின் பெறுமதி என்னவாக இருக்கும்?

(06 புள்ளிகள்)

b. 1000 ரூபா முகப்பெறுமதியைக் கொண்டதும் 16% முறியொன்றின் விளைவானது (Yield) கீழ்வரும் 3 சந்தர்ப்பங்களிலும் எவ்வாறிருக்கும் எனக் கணிப்பிடுக.

(i) நடைமுறை விலை 800 ரூபா.
(ii) நடைமுறை விலை 1300 ரூபா.
(iii) நடைமுறை விலை 1000 ரூபா.

(06 புள்ளிகள்)

c. முறியொன்றின் முகப்பெறுமதி 1000 ரூபாவாகும். 1.7.1994 அன்று அது 908.87 ரூபா விலையில் விற்பனை செய்யப்பட்டது. 1999ல் 14% முதிர்வு வரை விளைவையும் (YTM) இம்முறி கொண்டுள்ளது. இம்முறியானது 1.1.1987 இல் வழங்கப்பட்டது. வட்டியானது அரையாண்டிற்கொரு தடவை செலுத்தப் படுகின்றது. நீர் பின்வருவனவற்றைக் கணிப்பிடுமாறு வேண்டப்படுகின்றீர்?

(i) இம் முறியின் வருடாந்த வட்டி?
(ii) 1.1.2005 ஆம் ஆண்டில் முறியின் விலை? (இம் முறி 20 வருட முதிர்வு காலத்தினையும், 15% சந்தை வட்டி வீதத்தினையும் கொண்டுள்ளது என எடுகோள் கொள்க)

(08 புள்ளிகள்)